

# கதை எனும் விதை

## கதை சொல்லல் எனும் கலையின் அறிவியல் பின்னணி

சி.க. தனபாண்டியன்
சு. கார்த்திகேயன்

மருத்துவ உளவியல் துறை
ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றோரின் மேம்பாட்டிற்கான
தேசிய நிறுவனம் (NIEPMD), சென்னை.

# கதை எனும் விதை

## கதை சொல்லல் எனும் கலையின் அறிவியல் பின்னணி

சி.க. தனபாண்டியன்
சு. கார்த்திகேயன்

மருத்துவ உளவியல் துறை
ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றோரின் மேம்பாட்டிற்கான
தேசிய நிறுவனம் (NIEPMD), சென்னை.

**கதை எனும் விதை**

**(கதை சொல்லல் எனும் கதையின் அறிவியல் பின்னணி)**

ஆசிரியர்கள்

**சி.க. தனபாண்டியன்**

**சு. கார்த்திகேயன்**

முதல் பதிப்பு: டிசம்பர் 2020

காப்புரிமை: **NIEPMD**

படங்கள்: **திரு. குமார்**

வடிவமைப்பு: **திரு. இர்ஃபான்**

வெளியிடுவோர்

**மருத்துவ உளவியல் துறை,**

**ஒன்றுக்கு மேற்பட்ட ஊனமுற்றோரின் மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனம் (NIEPMD)**

முட்டுக்காடு, சென்னை- 603 112.

**விலை: ₹50**

**ISBN: 978-81-946509-7-3**

# Foreword



A civilization transfers its cultural and accumulated traditional wisdom through folklores and stories. Stories groom up the two core capabilities of the mind, memory and imaginations. Stories encourage communication, joint attention, development of self and define boundaries. It takes an attempt and a bit of effort to become a story teller which is strongly recommended to all parents.

Given its significance, the authors have made an attempt to document, compile and present information related to the importance of storytelling and how children of varying ages can master this skill. This book would serve as a guide for parents, teachers and other professionals to teach and direct the young ones in the journey of mastering the art of storytelling. The pictorial representations and simplicity of language used make this book a delight for the reader's mind. Apart from imparting knowledge, the book encourages participation from parent/guardian figures which increases the strength of their physical and emotional bonds with their children. The authors have worked with children for many years and their personal experience with them has provided valuable input in the integration of ideas in this book. I hope you enjoy this book as much as I did and I with this work great success.

Shri. Nachiketa Rout
Director (Offg)

# உள்ளே


| | |
|---|---|
| கதை சொல்லல் ஓர் அறிமுகம் | **01** |
| கதை என்பதன் வரையறை | **05** |
| கதை எப்படி உருவாகியிருக்கலாம் (தரவுகளற்ற கற்பனை) | **06** |
| கதைகளின் வகைகள் | **08** |
| கதை சொல்லல் என்பது என்ன? | **08** |
| கதை சொல்லலை தீர்மானிக்கும் காரணிகள் | **08** |
| அ) கதை சொல்பவரைச் சார்ந்த காரணிகள் | **09** |
| ஆ) கதை கேட்பவர் சார்ந்த காரணிகள் | **09** |
| இ) கதை சார்ந்த காரணிகள் | **10** |
| கதை சொல்லல் நிகழ்வால் ஏற்படும் நன்மைகள் | **10** |
| கதை சொல்பவருக்கு இருக்க வேண்டிய அடிப்படைத் தகுதிகள் | **14** |
| கதை சொல்பவராக ஒருவர் உடனடியாக செய்ய வேண்டியவைகள் | **15** |
| கதைகளைக் கட்டமைக்கும் கலை<br>அ) எதன் அடிப்படையில் கதைகளை உருவாக்க வேண்டும் | **19** |

| | |
|---|---|
| ஆ) வயதின் அடிப்படையில் கதை சொல்லல்<br>• கர்ப்ப காலத்தில் 7 வது மாதத்திற்குப் பிறகு உரையாடல்நிகழ்வு | **20** |
| • 0-12 மாதங்கள் உடைய குழந்தைகளுடனான உரையாடல் முறைகள் | **22** |
| • 12 மாதங்கள் முதல் 36 மாதங்கள் வரை உடைய குழந்தைகளுக்கான கதைகளைக் கட்டமைக்கும் பொது விதிகள் | **24** |
| 4 வயது முதல் 6 வயது வரை உடைய குழந்தைகளுக்கான கதைகளைக் கட்டமைக்கும் பொது விதிகள் | **25** |
| 7 முதல் 10 வயது வரை உடைய குழந்தைகளுக்கான கதைகளைக் கட்டமைக்கும் பொது விதிகள் | **28** |
| 10 முதல் 15 வயது வரை உடைய குழந்தைகளுக்கான கதைகளைக் கட்டமைக்கும் பொது விதிகள் | **30** |
| முடிவுரை | **32** |

# நூல் அறிமுகம்

மனிதன் வாழும் சமூகம் எங்கு நோக்கினும் அங்கே எண்ணற்ற வகையிலான கதைகள் வெளியெங்கும் காற்றோடு காற்றாக கலந்து, கரைந்து கிடக்கிறது. கதை, கதை சொல்லி, கதை கேட்பவர் என்கிற எல்லை எப்போதும் விரிந்தே கிடக்கிறது. கதை எங்கு சென்று சேருகிறதோ அங்கே அவை புது வடிவம் பெறுகிறது, கதை சொல்பவரை தேர்ந்தெடுக்கிறது. அதன் வழியே கதை கேட்பவரை சென்றடைகிறது.

மனிதனுக்கும், கதைகளுக்குமான நெருக்கம் மிக ஆழமானது, அடர்த்தியானது. கதைகளை வெறுமனே கேட்டுக் கொண்டும், சொல்லிக் கொண்டும் கடப்பதை விட அவைகளுக்குள் செழுமையாக இருக்கும் அறிவியல் தன்மைகளையும், பயன்களையும் ஆவணப்படுத்தும் சிறு முயற்சி. கதைகள் நெடுக கிடக்கும் சமூக, உளவியல் கூறுகளை அறிவியல் கண்ணோட்டத்தோடு அணுகுகிறது இந்நூல்.

கதைகளை எப்படி கட்டமைக்க வேண்டும், கதைகளைக் கட்டமைக்கும் போது கவனிக்க வேண்டியவைகள் குறித்தும், கதை சொல்பவருக்கு இருக்க வேண்டிய அடிப்படைத் திறன்கள் குறித்தும் பேசும் இந்நூல் ஒரு சிறு துவக்கம். இது குறித்த முழுமையான, விரிவான நூலொன்று எழுதப்படும் என நம்புகிறோம்.

இந்நூல் முழுவடிவம் பெற ஆக்கமும் ஊக்கமும் அளித்த NIEPMD- ன் இயக்குனர் திரு. நச்சிகேதா ரௌத் அவர்களுக்கும், இப்புத்தகத்தில் பதிப்பிக்க எண்ணற்ற புகைப்படங்களை மனமுவந்து முழுமையாக வழங்கிய கதை சொல்லியும் அருமை தம்பியுமாகிய திரு. குமார் அவர்களுக்கும், மற்றும் குழந்தைகள் சசிதரன், நிரஞ்சனா, ஹேமப்பிரியா, சுகந்தன் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றி.

சென்னை

பேரன்புடன்,

சி. க. தனபாண்டியன்

சு. கார்த்திகேயன்


# 1. கதை சொல்லல் ஓர் அறிமுகம்

மனித இனம் விலங்கின தன்மைகளோடு தங்கள் வாழ்க்கையை துவங்கி, சிறு சிறு குழுக்களாக மாறத்துவங்கிய காலத்திலிருந்து இந்நாள் வரை காலத்தின் ஒவ்வொரு நகர்வுகளிலும் எண்ணிலடங்கா கதைகள் உலகெங்கும் சொல்லப்பட்டுக் கொண்டே வந்திருக்கின்றன. நோக்கம், சொல்லலின் தன்மை, சொல்ல பயன்படுத்திய முறைகள் மாற்றம் பெற்றுக்கொண்டே வந்திருக்கிறது என்பதனை பல்வேறு தொல்பொருள்  ஆய்வுகள் நிறுவுகின்றன.




கதை சொல்லல் என்பது நடக்கும், நடந்த, நடக்கவிருக்கும் நிகழ்வுகளை, கேள்வியுற்ற, புனையப்பட்ட கதைகளை சிற்பங்களாகவும், ஓவியங்களாகவும், உரையாடல் வடிவிலும், சைகை மொழியிலும், வரி வடிவிலும், பாடல்களாகவும், தெருகூத்து வடிவிலும், இன்னு பிற வடிவிலும் நிகழ்கால மற்றும் எதிர்கால சந்ததிகளிடம் கொண்டு சேர்க்கும் கலையின் ஓடம்.

கதை சொல்லல் நிகழ்வானது இன்று நேற்று வந்ததல்ல, பழங்காலம் தொட்டே உலகெங்கிலும் இருந்து வருகிறது. ஆரம்பத்தில் இயற்கையை வேண்டல், கடவுள் வழிபாடு, இறப்பு குறித்த சடங்குகள் என்று துவங்கிய கதை சொல்லல் நிகழ்வு என்பது காலத்திற்கும், சூழலுக்கும் ஏற்றாற்போல் மாறி சமூக விழிப்புணர்வு, ஒழுக்க நெறிமுறைகள், வாழ்வியல் நெறிகள், பாடங்களை பயிற்றுவித்தல் என அனைத்திற்கும் பயன்படும் ஒப்பற்ற கலைக் கருவியாக இருக்கிறது.



அனைத்து நிலம் சார்ந்தும், சமூக, கலாச்சாரநிலை சார்ந்தும், பருவநிலை சார்ந்தும், மொழி சார்ந்தும், பால் வேறுபாடுகள் சார்ந்தும், சிறுவர் முதல் பெரியவர்கள் வரை கதைகள் சொல்லப்படுகின்றன. காலம் தன் போக்கில் எத்தனையோ விசயங்களை தூர வீசி எறிந்திருக்கிறது ஆனால் கதைகளையும், கதை சொல்லலையும் மட்டும் தன் பயணத்தில் கூடவே வைத்திருப்பது என்பதே கதை குறித்தும், கதை சொல்லல் குறித்தும் நாம் அறிந்து கொள்வதற்கான அவசியத்தை முன் வைக்கிறது.

கதை சொல்லல் என்பது வெறுமனே கதைகளை மட்டும் கடத்துதல் என பொருள் கொள்ளுதல் தவறான கண்ணோட்டம் ஆகும். சமூகத்தில் நிலவிய, நிலவுகின்ற பண்பாட்டுக் கூறுகளையும், அதுசார்ந்த மாறுதல்களையும் சேர்த்து அடுத்த தலைமுறைகளுக்கு கடத்துகிற ஒன்றாகவே பார்க்கப்பட வேண்டும்.



இந்தியாவைப் பொறுத்தவரை கதைகளுக்கும், கதை சொல்லிகளுக்கும் (கதைசொல்லி = கதை சொல்பவர்) பஞ்சம் இருந்ததில்லை. ஒவ்வொரு வீட்டிலும் இருந்த வயது முதிர்ந்தவர்களில் ஏறக்குறைய அனைவருமே தலைசிறந்த கதை சொல்லிகளாகவும், கதை சொல்லிகளை உருவாக்குகின்ற வித்தைகளைக் கற்றுத்தேர்ந்த வித்தகர்களாகவும் இருந்திருக்கிறார்கள்.

கூட்டுக் குடும்ப சிதைவு, நகரம்சார் நகர்வு, பொருளாதாரத் தேடல்கள், மதிப்பெண் நோக்கிய கல்வி முறை, தொலைக்கட்சி பெட்டிகளின் வருகை, அலைபேசிகளின் ஆதிக்கம், முதியவர்களும் தொலைக்காட்சி மற்றும் அலைபேசிகளுக்குள் ஆழ்ந்து போனது, இன்னும் பிற காரணங்கள் எல்லாம் சேர்ந்து குவிந்து கிடக்கும் கதைகளை குழந்தைகளுக்கு அறிமுகம் இல்லாமல் அந்நியப்படுத்திக் கொண்டே இருப்பதோடு மட்டுமல்லாது அவை நம்மிடம் வாழ்ந்து கொண்டிருக்கும் தலைசிறந்த கதை சொல்லிகளையும் கொஞ்சம் கொஞ்சமாக அழித்துக்கொண்டே வருகிறது.

சமீப காலங்களில், பெற்றோர்களின் பங்களிப்பு என்பது கதை சொல்லலை பொறுத்தவரை உறங்கும் முன் போடப்படும் தூக்க மந்திரமாகவே பார்க்கப்படுகிறது. பல குடும்பங்களில் கதை சொல்லல் நிகழ்வென்பது நடப்பதே கூட இல்லை என்றாகிவிட்டது என்பதை வெறுமனே கடக்க முடியாது. கதை சொல்லல்கள் அற்ற சமூகம் சந்திக்கும் உளவியல் சிக்கல்களை உள்ளார்ந்து நோக்க வேண்டிய அவசியமும் உண்டு.






கதை சொல்லலை தவிர்ப்பதற்கான வேறு சில  காரணங்களில் மிக முக்கியமானது கதை என்றால் என்ன என்பதை புரிந்து கொள்வதில் நிலவும் சிக்கல்கள், கதையை தேர்ந்தெடுக்கும் முன் கவனிக்க வேண்டியவைகள் குறித்த விழிப்புணர்வின்மை, கதைகளை குழந்தைகளின் வயதிற்கேற்ப கட்டமைப்பது எப்படி என்கிற தெளிவின்மை, அவற்றை எந்த முறையில் குழந்தைகளிடம் சொல்வது என்கிற குழப்பங்களும் பெற்றோர்களிடம் பரவலாக காண முடிகிறது. அத்தகைய சிக்கல்களைக் குறைப்பதும், கதை சொல்லலின் அவசியத்தை புரிந்துகொள்ளவும், அவற்றில் பொதிந்து கிடக்கும் அறிவியல் பின்னணி குறித்து பேசுவதும் அவசியமாகிறது.

## 2. கதை என்பதன் வரையறை



கதைகளைச் சொல்வதைப்போல  போல அத்தனை எளிதாக கதைக்கான வரையறையை கூறுவது அத்தனை எளிதல்ல. ஏனெனில் கதையின் வரையறை நபருக்கு நபர், இடத்திற்கு இடம், காலத்திற்கு காலம் மாறுபடுகிறது.

உண்மையான/உண்மை அல்லாத நபர்கள், பொருட்கள், விலங்குகள், ஏனையவைகள் மற்றும் நிகழ்வுகள் பற்றிய வவரிப்பினை கதை எனலாம்.

கதை என்பது நடந்த நிகழ்வுகளையோ, அனுபவங்களையோ, கேட்ட, படித்த, கற்பனையானவற்றை விவரித்தல் எனவும் பொருள் கொள்ளலாம்.

கதைகளுக்கும், சிறுகதைகளுக்குமான வேறுபாடுகள் உண்டு என்கிற கருத்தும் உண்டு.
எழுத்தாளர் திரு. ஜெயமோகன் அவர்களின் கூற்றுப்படி **‘கதைகளுக்கும், சிறு கதைகளுக்குமான வித்தியாசம் என்னவெனில் கதைகளில் மையம் என்று ஒன்று இருக்கும். ஆனால் அவற்றில் எவ்வித திருப்பங்களும் இருக்காது.சிறுகதைகளில் திருப்பங்கள் (Twist) இருக்கும்’.**

திருப்பங்களே கதை அல்லது சிறுகதை என்பதை தீர்மானிக்கின்றன.

‘சிறுகதை என்றால் இறுதியில் திருப்பம் உள்ள சிறிய கதை’ என்று எளிமையாக வரையறுக்கிறார். அத்தோடு கீழ்காணும் உதாரணம் கொண்டு விளக்குகிறார்,

வடையை கவ்வியிருக்கும் காக்கையை, நரி பாடச்சொல்ல, காக்கையும்பாட, கீழே விழும் வடையை நரி தூக்கிக்சென்றால்’ அது கதை. ஏனெனில் எவ்வித திருப்பங்களும் இல்லை. நேரடியாக சொல்ல வந்த விஷயத்தை சொல்லி விடுகிறது.

அதே உதாரணத்தை வேறு மாதிரியாக சொன்னால்
வடையை கவ்வியிருக்கும் காக்கையை, நரி பாடச் சொல்ல, காக்கை தன் வாயிலிருக்கும் வடையை காலில் வைத்துக்கொண்டு பாட, நரி திகைத்து ஏமார்ந்து சென்றால்’ அதுவே சிறுகதை. ஏனெனில் இதன் முடிவில் திருப்பம் உள்ளது. கூற வந்த கருத்தை நேரடியாகச் சொல்லாமல் மறைமுகமாக சொல்கிறது.
இப்புத்தகத்தில் கதைகளையும், சிறுகதைகளையும் பற்றி பேசினாலும் கதை சொல்லல் குறித்தே அதிகம் பேசப்போகிறோம்.

## 3. கதை எப்படி உருவாகியிருக்கலாம் (தரவுகளற்ற கற்பனை)

முன்னொரு காலத்தில்..... எனத் துவங்கும் எத்தனையோ கதைகள் உலகெங்கும் சொல்லப்பட்டு வந்தாலும், கதைகளின் வரலாற்றினை அறுதியிட்டு கூற இயலவில்லை.

உலகின் ஏதோவொரு இடத்தில் இருவருக்கும் மத்தியிலோ அல்லது குழுக்களுக்கு இடையிலோ சமிக்கை வடிவிலான கதை சொல்லப்பட்டிருக்கலாம். மொழிகளற்ற ஓர் உலகில் சமிக்கைகளே பிரதான மொழியாக இருந்திருக்கவும், அதன் பிறகு உடல் மொழியால் சொல்லப்பட்டும், அதைத்தொடர்ந்து ஓவியங்கள், சிற்பங்கள் வாயிலாகவும் சொல்லப்பட்டு வந்திருக்கலாம். மொழி என்ற ஒன்று உருவாகிய பிறகு கதை சொல்லல்களில் பெரும் மாற்றம் நிகழ்ந்து இருக்க வேண்டும்.

கல்வெட்டுக்களாகவும், செப்பேடுகளாகவும், இன்ன பிற ஆவணங்களாகவும் இருந்த கதைகள், அச்சு ஊடகத்தின் தோற்றங்களால் புதிய வேகம் எடுத்து ஒரு குறிப்பிட்ட எல்லைகளுக்குள்ளாக இருந்த கதைகள் உலகெங்கும் பரவிவிட்டது.


அடர்ந்த வனங்களில் துவங்கிய எண்ணற்ற உரையாடல்கள் காற்றில் கரைந்து, தனக்கான ஓர் இடத்தை தன்னிகரற்று பிடித்துவிட்டது. காலமெனும் ஓடத்தில் எல்லாம் அடித்துக்கொண்டு போவது போல கதை சொல்லிகளும் அடித்து செல்லப்பட்டுக் கொண்டே வருகிறார்கள். கதைகள் அற்ற, கதை சொல்லிகள் அற்ற சமூகம் அத்தனை ஆரோக்கியமானது அல்ல.



தமிழகத்தைப் பொறுத்தவரையில் தமிழ் கதை சொல்லல் மரபு என்பது தொன்மையானது. கதைகளுக்குள்ளாக எண்ணற்ற சமூக, உளவியல் கூறுகளை மென்மையாக குழந்தைகளுக்குள் கடத்திவிடும் செயல்முறை பழங்காலம் முதலே இருந்து வந்திருகிறது.

- **இலக்கற்ற கதைகள்**
- **அறநெறிக் கதைகள்**
- **சமூகக் கதைகள்**
- **நாட்டுப்புறக் கதைகள்**
- **சமயக் கதைகள்**
- **விளையாட்டுக் கதைகள்**
- **தொழிற்சார் கதைகள்**
- **சிந்தனைக் கதைகள்**
- **நம்பிக்கை சார்ந்த கதைகள்**
- **நகைச்சுவைக் கதைகள்**
- **வரலாற்றுக் கதைகள்**
- **வாழ்க்கைக் கதைகள்**
- **உளவியல் சார்ந்த கதைகள்**
- **மர்மக் கதைகள்**
- **பாலியல் கதைகள்**
- **கற்பனைக் கதைகள்**
- **அறிவியல் கதைகள்**
- **உரையாடல் கதைகள்**
- **இயற்கை சார்ந்த கதைகள்**
- **கண்டுபிடிப்பு கதைகள்**
- **உடல் மன இணைப்புக் கதைகள்**

## 4. கதைகளின் வகைகள்



- உண்மைக் கதைகள்
- கற்பனைக் கதைகள்
- முடிவுறு கதைகள்
- முடிவிலா கதைகள்
- கேள்வி சூழ் கதைகள் (திருப்பங்கள் உள்ள கதைகள்)
- கேள்வியற்ற கதைகள் (திருப்பங்கள் இல்லாத கதைகள்)


இது தவிர பல்வேறு கதை வகைகளும், தொகுதிகளும் உண்டு என்பதையும் மறுப்பதற்கில்லை.

## 5. கதை சொல்லல் என்பது என்ன?

மனித வெளிப்பாட்டின் மதிப்புமிக்க ஒரு பழங்கால கலை வடிவம் கதை சொல்லல்.

கதைகளை மற்றவர்களிடம் வாய் மொழியாகவோ அல்லது வேறு கலை வடிவங்களான ஓவியம், நாடகம், கூத்து, இன்னபிற கலைகளின் வாயிலாக மற்றவர்கள் விரும்பத்தக்க வகையில் கொண்டு போய் சேர்க்கும் கலை.


## 6. கதை சொல்லலைத் தீர்மானிக்கும் காரணிகள்



கதை சொல்லியிடமிருந்து வரும் கதைகளில் இருக்க வேண்டிய அடிப்படையான விசயங்கள் இல்லாது போனால் கேட்போருடைய முழு கவனத்தையும் ஈர்க்கவோ, கடத்த நினைத்த கருத்துக்களை மற்றவருக்கு கடத்தவோ இயலாது.

கதை சொல்லுதலில் சரி என்றும், தவறென்றும் ஏதுமில்லை. ஒரு சிறந்ததொரு கதை சொல்லல் நிகழ்வை கீழ்காணும் சில விஷயங்கள் செழுமைப்படுத்த உதவுபவையே தவிர இவை ஏதுமின்றியும் கதை சொல்லி ஆகலாம்.

## அ) கதை சொல்பவரைச் சார்ந்த காரணிகள்



- கதை சொல்பவரின் ஆர்வம்
- கதை சொல்பவரின் வயது மற்றும் பாலினம்
- கதை சொல்பவரின் ஆர்வம்
- கதை சொல்பவரின் சமூக உணர்வு
- கதை சொல்பவரின் சிந்திக்கும் திறன்
- கதை சொல்பவரின் மொழிப் புலமை
- கதை சொல்பவரின் நகைச்சுவை உணர்வு
- கதை சொல்பவர் தன் உணர்வுகளை குரல்களில் காட்டும் திறன்
- கதை சொல்பவர் கேட்போரின் மனநிலையை ஆய்ந்தறியும் திறன்
- கதையின் நிகழ்வுகளை ஒருங்கமைத்து நகர்த்தும் திறன்
- கதை சொல்பவரின் முடிவெடுக்கும் திறன்
- கதையை எந்நிலையிலும் நீட்டவோ அல்லது முடிக்கவோ இருக்கும் திறன்

## ஆ) கதை கேட்பவரைச் சார்ந்த காரணிகள்

- கதை கேட்பவரின் ஆர்வம்
- கதையைக் கேட்பவரின் வயது மற்றும் பாலினம்
- கேட்பவரின் அறிவுத்திறன்
- கேட்பவரின் கேள்வி கேட்கும் திறன்
- கேட்பவரின் வாழும் சூழல்

## இ) கதையைச் சார்ந்த காரணிகள்

- கதையின் மையம்
- கதைக் களம்
- கதை நிகழ்வதாகச் சொல்லப்படும் சூழல்
- கதை சொல்லப்படும் சூழல்
- கதையின் ஆரம்பம் மற்றும் முடிவு
- கதை சொல்லப்படும் கால அளவு
- கதை மாந்தர்கள் (Characters) குறித்த விவரணைகள்
- கதை களம் குறித்த விவரணைகள்
- கதையில் வரும் வசனங்கள்
- திருப்பு முனைகள் (Twists)
- பருவ நிலை
- கதை சொல்லலின் வடிவம்
- கதை சொல்லலுக்குப் பயன்படுத்தப்படும் பொருட்கள்
- கதை சொல்லலுக்குப் பயன்படுத்தப்படும் ஊடகங்கள்



## 7. கதை சொல்லல் நிகழ்வினால் ஏற்படும் நன்மைகள்

- குழந்தைகளின் மகிழ்ச்சியின் திறவுகோலாக கதைகள் இருக்கின்றன.
- குழந்தைகளின் கவனக் குவிப்பை ஒருங்கமைக்கவும், மேம்படுத்தவும் உதவும்.
- ஸ்கீமா என சொல்லப்படுகிற மனபிம்பக் கூறுகளை வளப்படுத்த கதை சொல்லல் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. உதாரணமாக, மாம்பழத்தை மற்ற பழங்களிலிருந்து வேறுபடுத்தும் முக்கிய கூறுகளை கதைகளில் சேர்த்து சொல்லுவதன் மூலமாக குழந்தைகள் பழங்களுக்கு இடையேயான வேறுபாடுகளை கண்டறியும் அறிவுத்திறன் பண்புகளில் ஏற்பத் தூண்டலை ஏற்படுத்திவிட முடியும்.

- மனித உணர்ச்சிகளை கட்டுப்படுத்தும் மூளையின் பகுதிகளான ‘அமிக்டலா’ (Amygdala) மற்றும் உணர்வு மண்டலம் / லிம்பிக் சிஸ்டம் (Limbic System) ஆகியவற்றில் நேர்மறை மாற்றங்களை ஏற்படுத்தி உணர்ச்சி வெளிப்பாடுகளை ஒழுங்கமைக்க உதவுகிறது.



- வாசிப்புகளால் கொண்டு வர முடியாத அளவிலான குறுகிய கால மற்றும் நீண்ட கால நினைவுத்திறனை கதை கேட்டல் மற்றம் சொல்லலில் மூலமாக மேம்படுத்த முடியும்.

- மூளையிலுள்ள முக்கிய மொழி வள மையங்களான வெர்னிக்-ன் பகுதி (Wernicke’s area) நாம் கேட்கும் வார்த்தைகளை புரிந்து கொள்ள உதவி புரிகிறது. அதே போல ப்ரோக்காஸ்-ன் பகுதி (Broca’s area) நாம் பேசும் வார்த்தைகளை உற்பத்தி மையமாக விளங்குகிறது. கதைகளை கேட்கக் கூடிய மற்றும் சொல்லக்கூடிய குழந்தைகளுக்கு இவ்விரண்டு பகுதிகளும் நேர்மறையாக தூண்டப்பட்டு அவர்களின் மொழித்திறன் மற்றும் புரிதல் திறனை மேம்படுத்த உதவி புரிகிறது. பேச்சுத்திறன் குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு வழங்கப்படும் சிகிச்சைகளில் கதை சொல்லல் மற்றும் கதை கேட்டல் முக்கிய பங்கு வகிக்கிறது.

- கதைகள் குழந்தைகளின் முன் மூளை பகுதிகளில் ஆரோக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தி கவனித்து அறிதல் திறன், முடிவெடுக்கும் திறன் மற்றும் திட்டமிடல் திறன்களை வளர்க்க மிகவும் உதவி புரிகின்றன.

- கதையில் வரும் கதாபாத்திரங்களாக வாசனை மற்றும் சுவை உணர்வுகளை உருவகித்துச் சொல்வதன் மூலமாக கதைகளைக் கேட்கும் குழந்தைகளின் வாசனை மற்றும் சுவை உணர்வினைத் தூண்ட முடியும் என சில ஆய்வுகளின் வழியே கண்டறிந்துள்ளனர்.



- கதையிலுள்ள கதாபாத்திரங்களில் குழந்தைகளின் பெயர்களையும், அவர்களிடம் வளர்த்தெடுக்க வேண்டிய குணநலன்களையும் புகுத்தி சொல்லுவதன் மூலமாக குழந்தைகளிடத்தில் நேர்மறை மாற்றங்களைக் காண முடியும். அத்துடன் அக்குழந்தைகளில் தன்னம்பிக்கை, சுய மதிப்பு, பகிர்வு மனப்பான்மை, சமூக சிந்தனைகள் போன்றவற்றை வளர்த்தெடுக்க முடியும்.

- சகிப்புத்தன்மை மற்றும் பிறரோடு இணங்கிச் செயல்படும் தன்மையை உருவாக்க கதைகள் பெரிதும் உதவும்.



- குழுவில் ஒரு அங்கமாகவும் அதேவேளையில் தனித்து முடிவெடுத்து செயல்படும் திறனை  வளப்படுத்தும் ஒரு கருவியாக கதைகளை பயன்படுத்தலாம்.

- புதிய, மாறுபட்ட, சுயசார்பு சிந்தனைகளை தோற்றுவிக்கவும், கற்பனைத் திறனை ஊக்குவிக்கவும் கதைகள் பயன்படுகின்றன. கதை சொல்லலை ஊக்கப்படுத்துவதன் மூலமாக குழந்தைகளின் சிந்தனை எல்லைகளை விரிவடையச் செய்ய முடியும்.

- சுய உணர்வு மற்றும் பிறர் உணர்வு நிலை மாற்றங்களைப் புரிந்து கொள்ளவும், அதன் வழியே சரியான முறையில் வெளிப்படுத்தவும் கதைகள் உதவுகின்றன. ஏனெனில் கதைகளின் வழியே பிறருடைய உணர்வு மாற்றங்கள் குறித்த புரிதலை ஏற்படுத்துவதன் மூலமாக பிறரின் நிலையிலிருந்து பார்க்கும் ஓர் உயரிய பண்பை வளர்க்க முடியும்.




- தான் வாழும் சூழலைப் பல்வேறு பரிமாணங்களில் புரிந்து கொள்ள கதைகள் உதவி புரிகின்றன.

- சமூகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவும், சமூக வரையறைகளை பின்பற்றவும் உதவி புரிகின்றன.

- அன்றாட நிகழ்வுகளில் வெற்றியைப் பெற உதவும் பல்வேறு வழிமுறைகளைக் கற்றுக்கொள்ளவும் அதேவேளையில் தோல்விகளைக் கண்டு துவளாமல் மீண்டெழும் மன உறுதியையும் கதை சொல்லலின் வழியே ஏற்படுத்திவிட முடியும்.

- அன்றாட வாழ்விற்குத் தேவையான அடிப்படைத் திறன்களைக் கற்றுக் கொடுக்க கதை சொல்லல் சிறந்த முறையாகும்.



- கதை சொல்லல் எனும் அறிவியல் கலை குழந்தைகளின் ஆளுமையை கட்டி எழுப்புவதில் பெரும் பங்கு வகிக்கின்றது.

- வாழ்வில் நிகழ்ந்த மகிழ்வான தருணங்களை பசுமையாக வாழ்க்கை நெடுகிலும் சுமந்து செல்வதற்கும், கசப்பான வாழ்க்கை அனுபவங்களை மறக்கவும் உதவுகின்றன.

- உளப்பகுப்பாய்வு சிகிச்சை மற்றும் ஆற்றுப்படுத்துதல் (Counselling) முறைகளில் கதை சொல்லல் பெரும் பங்கு வகிக்கின்றது.

## 8. கதை சொல்பவர்களுக்கு இருக்க வேண்டிய அடிப்படைத் தகுதிகள்

கதை சொல்வதை விட, கதை சொல்லியாக இருக்க வேண்டியவர்களுடைய தகுதிகளின் பட்டியல் என யாரேனும் சொல்லுவதைக் கேட்டு அதை உண்மையென நம்பி அதை நினைத்து, பயந்து, பெரும்பாலான பெற்றோர்கள் கதை சொல்வதை தவிர்த்து விடுகிறார்கள் அல்லது நிறுத்தி விடுகிறார்கள்.

கதை சொல்பவர்களுக்கு பிரத்யேக தகுதிகள் ஏதுமில்லை. நீங்கள் நீங்களாக இருப்பதைத் தவிர வேறு என்ன வேண்டும்?

கதைகள் நம் மனதால் உருவாக்கப்படுபவை மட்டுமல்லாது நம் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்தவை. யார் ஒருவர் கதை சொல்ல விளைகிறாரோ அக்கணமே அவர் கதை சொல்லியாகி விடுகிறார். இதில் சிறந்த கதை சொல்லிகள் என்றோ, தகுதியற்ற கதை சொல்லிகள் என்றோ யாருமில்லை.



சிலர் தொடர்ந்து கதைகளை உருவாக்கியும், சொல்லியும் தங்கள் அனுபவத்தின் மூலமாக திறன் பெற்றவர்களாக தங்களை மேம்படுத்தியிருப்பார்கள் அது போல யார் வேண்டுமானாலும் தங்கள் திறன்களை எந்த வயதிலும் வளர்த்துக் கொள்ளலாம். கதை சொல்லிகளாக ஆவதற்கு கல்வி, வயது, பாலினம், இனம், பொருளாதார நிலை, வாழும் சூழல் என எதுவும் தடை இல்லை.

நீங்கள் பார்க்கின்ற, கேட்கின்ற, உணர்கின்ற, உணர முடியாத என அத்தனையும் கதைகள் கொண்டே பயணிக்கின்றன என்பதை எப்போது உணர்கிறீர்களோ அக்கணமே நீங்கள் ஒரு கதை சொல்லியாக மாற்றம் பெறத் தகுதி உடையவர்களாக உரு பெற்று விடுகிறீர்கள்.

## 9. கதை சொல்பவராக ஒருவர் உடனடியாக செய்ய வேண்டியவைகள்




- உங்கள் பகுத்தறிவை கொஞ்சம் ஓரமாக வைத்து விடுங்கள். சொல்ல துவங்கி சில காலமாவது பகுத்தறிவு கொண்டு பார்ப்பதைத் தவிர்ப்பது கதை சொல்லுதலில் உங்களுக்குள்ள தன்னம்பிக்கையை அதிகரிக்கச் செய்யும்.

- நீங்கள் தவறாக கதை சொன்னாலோ அல்லது பிறர் சொல்லும் கதைகளில் தவறுகள் இருந்தாலோ அவற்றை முழு மனதோடு ரசிக்கத் துவங்குங்கள்.

- கதையை அதன் போக்கில் பயணிக்க அனுமதியுங்கள். நீங்கள் நினைத்த ஆரம்பம் புள்ளி மற்றும் முடிவையே எட்ட வேண்டும் என எண்ணாதீர்கள். ஏனெனில் பெரும்பாலான கதைகள் எங்கோ ஆரம்பித்து எங்கோ பயணிப்பதே சுவாரசியமாக அமைந்து விடுகின்றன.

- இலக்கற்ற கதைக் கருவை உருவாக்கி ஏதேனும் ஒரு இலக்கில் முடிக்கலாம்.

- கிடைப்பவை எல்லாம் கதையின் கதாபாத்திரங்களாக மாற்றிப் பழகுங்கள். உதாரணமாக, நீங்கள் அமர்ந்திருக்கும் இடத்தில் ஒரு துண்டு காகிதம் இருந்தால் அதையே கதாபாத்திரமாக மாற்றி அமைத்து கதைகளை உருவாக்குங்கள். உருவாக்கிய கதைகளை உங்களுக்குள்ளேயே சொல்லிப் பாருங்கள். அவ்வாறு சொல்லிப் பார்க்கும் போது உணர்வைக் கொஞ்சம் கூட்டிக் குறைத்துப் பழகுங்கள்.

- யாரிடமும் எவ்விதமான விமர்சனங்களையும் எதிர் பார்க்காதீர்கள். ஒருவேளை விமர்சனங்கள் எதிர்மறையாக வந்தாலும் அதனை  பெரிதாக கண்டு கொள்ளாதீர்கள். ஒருவேளை உங்களுக்கு சில திறன்களை கற்றுக்கொண்டால் மட்டுமே கதை சொல்லியென உங்கள் மனம் ஏற்குமெனில் கீழே தரப்பட்டுள்ள திறன்களில் சிலவற்றை கற்றுக்கொள்ள முயற்சிக்கலாம். முடியவில்லை என்றாலும் அதனால் எவ்வித பின்னடைவும் இல்லை.



- கதைக் கருவை தேர்ந்தெடுக்கும் முறைகள்.

- கதைபாத்திரங்களை விவரிக்கும் முறை.

- திடீர் திருப்பங்கள் இருக்க வேண்டிய இடத்தை தேர்ந்தெடுத்தலும், அதன் அவசியத்தை புரிந்து கொள்ளுதலும்.


- ஆரம்பம் மற்றும் இறுதி நகர்வுகளை கதைகளுக்கு ஏற்ப மாற்றும் திறன்.

- கதை சொல்லும் போது கதையின் கால அளவை கதை கேட்பவர்களின் தன்மைகளுக்கும், சூழலுக்கும் ஏற்ப  நிர்ணயித்தல்.

- கதைகளின் போக்கிற்கு ஏற்பவும், கதாபத்திரங்களுக்கு ஏற்பவும் குரலினை மாற்றியமைக்கும் திறன்களை கற்றுக் கொள்ளுதல் கேட்பவரின் கவனத்தை முழுமையாக ஈர்க்கவல்லது.

- கதையில் வரும் கதாபாத்திரங்களின் செயல்பாடுகளை, தங்கள் உடல் மொழியைப் பயன்படுத்தி கதை சொல்பவர்கள் மிக எளிமையாக கதை கேட்பவரின் மனதினை சென்றடைகிறார்கள்.

- கதை கேட்பவர்களை வெறுமனே பார்வையாளராக வைக்காமல் அவைகளையும் கதை சொல்பவராக




- கதைகளில் வரும் உணர்வுகளின் சாரத்தை கேட்பவருக்கு கடத்தும் திறன்.
- விலையற்ற, கிடைக்கக்கூடிய பொருட்களை எல்லாம் பயன்படுத்தி கதையொன்றை கட்டமைத்து சொல்லும் திறன்.
- தாய்மொழியை அல்லது கற்றுக்கொண்ட மொழி ஏதாகினும் அவற்றைப் பயன்படுத்த அறிந்திருத்தல்.
- கதையின் போக்குகளை தீர்மானிக்கும் மிக முக்கியமான காரணியாக இருப்பது நகைச்சுவை. நகைச்சுவையாகச் சொல்லப்படும் கதைகள் கேட்பவர்களின் மனங்களை எளிமையாக ஊடுருவி தாக்கத்தை ஏற்படுத்தி விடுகின்றன.
- கதையின் போக்கை எவ்வகையிலும் மாற்றக்கூடிய நெகிழ்வுத்தன்மை கதை சொல்பவர்களுக்கு இருத்தல் அவசியம். ஏனெனில் கதைகளைக் கேட்கும் குழந்தைகளின் ஆர்வம் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஆகையால் அவர்களின் ஆர்வத்திற்கு ஏற்ப கதையின் போக்கினை மாற்ற தயாராக இருத்தல் அவசியம்.



- கதை சொல்பவர் வெறுமனே கதையை மட்டும் சொல்லாமல், இடையிடையே கதை கேட்பவர்களை நோக்கி கதாபாத்திரங்கள் குறித்து கேள்விகள் எழுப்புவதன் மூலமாக கேட்பவரை தங்கள் கட்டுக்குள் வைத்திருக்க முடியும்.

- கதை சொல்லும் சமூக சூழலில் நிகழ்கின்ற சமூக நிகழ்வுகளை உட்புகுத்தி சொல்லும் திறன் பெற்றிருப்பவர்கள் மிகப்பெரிய சமூக மாற்றங்களை ஏற்படுத்திவிட முடியும்.

- ஒரே மாதிரியாக கதை சொல்லும் அனுகுமுறைகளை தேவை எற்படும்போது மாற்றி, புதிய யுக்திகளை முயற்சிக்கும் திறன் பெற்றிருப்பது கதை சொல்லும் கலையை உயிரோட்டமாக வைத்திருக்க உதவி புரியும்.



கதைகள் உருவாக்க சிறப்பான காரணங்கள் ஏதும் தேவை இல்லை. கதைகளை உருவாக்கவோ, சொல்லவோ இயலாது என சொல்கிற ஒவ்வொருவரும் அன்றாடம் எத்தனையோ கதைகளை கட்டமைக்கிறோம், சிதைக்கிறோம். இவை எல்லாம் பெரும்பாலும் வெளிப்படையாக இல்லாமல் மனதிற்கும் தோன்றி மனதிற்குள்ளே அழிந்து விடுவதாலேயே நமக்கும் கதை சொல்லல் என்பதற்கும் சம்பந்தம் இல்லை என்று நம்பத் துவங்கி விடுகிறோம்.

உலகில் பிறந்த அனைவரும் தன்னளவில் ஒரு சிறந்த கதை சொல்லிகளே. உடல் மற்றும் மன குறைபாடுகள் ஒரு போதும் அவர்கள் கதை சொல்லியாக இருப்பதையோ, கதை கேட்பவராகவோ இருப்பதற்கோ தடை செய்வதேயில்லை. அவரவர் நிலையில், அவரவர் குணாதிசயங்களுக்கு ஏற்ப கதைகளை சொல்லக் கூடியவர்களாகவும், கேட்கக் கூடியவர்களாகவும் இருக்கிறார்கள்.

## 10. கதைகளை கட்டமைக்கும் கலை

### அ) எதன் அடிப்படையில் கதைகளை உருவாக்க வேண்டும்

குழந்தைகளின் வயதிற்கு ஏற்ப சொல்லப்படுகிற கதையானது மையக்கரு கொண்டதா அல்லது மையக்கரு அற்றதா என்பதைத் தீர்மானித்தல் வேண்டும். குறிப்பாக குழந்தைகளின் புரிதல் நிலையை (மன வளர்ச்சி) கருத்தில் கொள்ள வேண்டும்.



- குழந்தைகளுக்குத் தெரிந்தவற்றைக் (பொருட்கள், விலங்குகள், பறவைகள், மரங்கள், இன்ன பிற...) கொண்டே கதாபாத்திரங்களை உருவாக்குதல் கதை சொல்பவருக்கும், கேட்டபவருக்கும் ஆர்வத்தைத் தூண்டும்.
- வாக்கியங்கள் எத்தனை, பாடல்கள் எத்தனை என்பதையும், தனித்து கதை சொல்லப்போகிறீர்களா அல்லது மற்றவரோடு இணைந்து சொல்லப்போகிறீர்களா என்பதன் அடிப்படையில் கதைகளை உருவாக்க வேண்டும்.
- கதை சொல்லப் போகும் மொத்த நேரம் (2 நிமிடம், 5 நிமிடம், 10 நிமிடம், அல்லது அதற்கும் அதிகமான நேரம்) என்ன என்பதை கதை சொல்வதற்கு முன்பாகவே தீர்மானித்துவிடுதல் அவசியம். ஒருவேளை திட்டமிட்ட கால அளவைவிட குறைந்தாலோ அல்லது அதிகமானாலோ அதற்கேற்ப மாற்றிக்கொள்ள வேண்டும்.
- பகல் பொழுதில் சொல்லும் போது சிறு சிறு கதைகள் அதிக எண்ணிக்கையிலும், இரவில் சொல்லும் போது நீண்ட கதைகள் ஒன்றிரண்டு சொல்வது பயனளிக்கும்.
- குழுவாக இருப்போருக்கு கதை சொல்ல வேண்டுமெனில் அவர்களுடைய வயது, படிப்பு போன்ற பொதுவான பண்புகள் குறித்த விபரங்களை கதை சொல்லி அறிந்து வைத்திருப்பதும், அவற்றின் அடிப்படையில் கதை நகர்வுகளை கட்டமைப்பதும் அவசியமாகும்.

- சிறப்புக் குழந்தைகளுக்கு சொல்ல உருவாக்கும் கதைகளில் பல்வேறு விளையாட்டு உபகரணங்களை அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப பயன்படுத்தும் வகையில் கதைகள் அமைக்கப்பட வேண்டும். உதாரணத்திற்கு, பார்வைத்திறன் மாறுபாடு உள்ள குழந்தைகளுக்கான கதைகளில் கேட்டளுணர்வு, தொடுவுணர்வு, சுவையுணர்வு, நுகர்வுணர்வு சார்ந்த பொருட்களை கதாபாத்திரங்களாக உருவாக்கி, அதை உணரச் செய்யும் வகையில் கதையின் போக்குகளை அமைக்க வேண்டும்.

**உதாரணக் கதை:** ‘ஊருக்குள்ள பெரிய யானை ஒன்னு கழுத்து மணியை டிங்.. டிங்.. டிங்..னு ஆட்டிக்கிட்டே வந்தது (மணி ஓசை எழுப்ப வேண்டும்). அதோட சத்தம் கேட்ட வெளியே வந்தவங்க கைய கூப்பி வணங்கினாங்க (குழந்தையின் கைககளை கூப்பி வணங்கச் சொல்லலாம் அல்லது உதவலாம்).....

## ஆ) வயதின் அடிப்படையில் கதை சொல்லல்

### i) கர்ப்ப காலத்தில் 7 வது மாதத்திற்குப் பிறகு உரையாடல் நிகழ்வு

கர்ப்ப கால கட்டத்தில் நிகழும் தாயிற்கும், கருவிற்குமான உரையாடல்கள் பிரசவிக்கப்பட்ட பிறகு குழந்தைகளுக்கு எவ்வித நேர்மறை மாற்றங்களை ஏற்படுத்துகின்றன என்கிற ஆய்வுகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன.



இந்திய தேசத்தின் எல்லா பகுதிகளிலும் கர்ப்ப கால கட்டத்தில் தாய் தான் சுமக்கும் கருவோடு நிகழ்த்தும் உரையாடல்களைப் பற்றியும், அதன் நேர்மறை விளைவுகளைப் பற்றியும் குறிப்புகள் வாய்மொழி கதைகளாகவும், இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. அவை அனுபவ அறிவினால் பெறப்பட்டவை. கருவில் இருக்கும் குழந்தையிடம் தினந்தோறும் பேசும் தாய், தந்தையரின் குரலை அறியும் தன்மை குழந்தைக்கு இயல்பாகவே வந்து விட வாய்ப்பிருக்கிறது.

கர்ப்ப காலகட்ட உரையாடல் நிகழ்வின் விளை பயன்  அதிக முக்கியம் என்பதால், கர்ப்ப கால கட்டத்தின் ஏழாவது மாதத்திற்குப் பிறகான நாட்களில் கருவுடனான உரையாடல்களை ஊக்குவித்தல் அவசியம். அவை தாய் சேய் உணர்வு பிணைப்பிற்கும், கருவிலுள்ள குழந்தையின் மொழித்திறன் வளர்ச்சிக்கும் ஊட்டமாக அமைகிறது.

கர்ப்ப கால கட்டத்தில் தாய் தந்தையர் கருவுடன் உரையாடுதலை வழக்கமாக கொள்ள வேண்டும். கருவில் இருக்கும் குழந்தைக்கு கேட்குமா, கேட்காதா என்கிற சந்தேகமின்றி, நம்பிக்கையோடு, அன்போடும், அனுசரணையோடும் பேசவேண்டும். குழந்தைக்கு கேட்கிறதோ இல்லையோ குழந்தையை சுமக்கும் தாய் உங்கள் அன்பினால் மனம் மகிழ்வார். பிறகென்ன நிச்சயமாக அவை கருவிலுள்ள குழந்தையின் வளர்ச்சிக்கு  பெரிதும் துணை புரியும் என்பதை உங்களுக்கு சொல்லித்தான் தெரியவேண்டுமா என்ன!

கருவுடன் உரையாடும் போது  தாயின் வயிற்றை கைகளால் மென்மையாக தடவி கொடுத்துக் கொண்டே கருவுடன் உரையாடுதலும், தந்தை தன் முக கேசத்தால் தாயின் வயிற்றுப் பகுதியை தடவியபடி, முத்தம் கொடுத்துக்கொண்டும், பளிங்கு மற்றும் கண்ணாடி பொருட்களை ஒன்றோடு ஒன்று உரசுதல் மற்றும் தட்டும் முறைகளில் ஓசையை மென்மையாக எழுப்புவதன் மூலம் உரையாடுதல்  குழந்தைக்கு மட்டுமின்றி தாயிற்கும் பாதுகாப்பு உணர்வை அதிகரிக்கச் செய்கிறது.

இவை ஒவ்வொன்றின் நேர்மறை விளைவுகளை அறிவியல் முறையிலான ஆய்வுகளின் வழியே உறுதிப் படுத்துவதும், ஆவணப்படுத்துவதும் இன்றியமையாதது ஆகும். அதற்கான சாத்தியம் இன்றைய நவீன அறிவியல் முறைகளால் உருவாகி இருக்கின்றன.

## ii) 0-12 மாதங்கள் உடைய குழந்தைகளுடனான உரையாடல் முறைகள்

பச்சிளம் குழந்தைகளுடனான உரையாடல் என்பது உலகின் மிக அற்புதமானது.


ஏதும் அறியா பச்சிளம் குழந்தைக்கும், வாழ்வின் பெரும்பான்மையான அனுபவங்களைப் பெற்றுவிட்ட வயது முதிர்ந்தவர்களுக்கும் இடையே நிகழும் உரையாடல் மழைத் துளியைப் போன்று அத்தனை அழகானது, உயிர்ப்பானது. பிறக்கும் குழந்தையை வயது முதிர்ந்தவரின் கைகளில் கொடுப்பதற்கு நிறைய தத்துவார்த்தமான விளக்கங்கள் நம் சமூகத்தில் உண்டு.



குறை பிரசவத்தில் பிறக்கும், எடை குறைவான குழந்தையை தாய் தன் மார்போடு அணைத்து ஆரத் தழுவி கொஞ்சுதல் குழந்தையின் உடல் மற்றும் மனவளர்ச்சியை ஊக்குவிக்கிறது.

தாய்பால் புகட்டப்படும் குழந்தை, குறுகுறு கண்களால் பார்த்து, தாயின் முகத்தில் தன் மென் விரல்களால் ஓவியம் வரையும் கணத்தில், தாயும் மகிழ்ச்சியில் திளைத்து, குழந்தையின் முகம் பார்த்து, வழக்கில் இல்லாத கொஞ்சு மொழியை பிஞ்சுக் குழந்தையென பேசி உச்சி முகர்ந்து, முத்தங்கள் பதித்து, உடல் வருடும் நிகழ்விற்கு ஈடேதும் இல்லை. அதுவே அக்குழந்தைக்கான உணர்வு, மொழி, மன வளர்ச்சியை ஊக்கப்படுத்தும் செயல்.

- ஒரு வயதிற்கு குறைவான குழந்தைகளுக்கான கதை சொல்லல் என்பது முழுமை பெற்ற கதைகள் அல்ல. ஓரிரு வார்த்தைகள் அல்லது ஓரிரு வரி பாடல்கள் அல்லது உரையாடல்களாக இருக்க வேண்டும்.



- பொருளற்ற, இலக்குகளற்ற (எங்கிருந்து ஆரம்பிக்கிறோம், எங்கு முடிக்கப் போகிறோம் என்கிற வரைமுறை இல்லாதவை) பாடல்களாக இருப்பது சிறப்பு.

- அர்த்தமுள்ள வார்த்தைகளை பயன்படுத்த வேண்டிய தேவை இல்லை.  உதாரணமாக, நண்டூருது நரியூருது, பருப்பு கடைந்து முதலியவை. இது போன்ற பாடல்கள் இந்தியாவின் எல்லா பகுதிகளிலும் அவரவர் மொழி, கலாச்சரத்திற்கு ஏற்ப உள்ளது.

- குழந்தையோடு உரையாடுபவர், உரையாடல்களின் மத்தியில் ஒலிகளை எழுப்புதலும், உடல் மொழியை மிகுதியாக பயன்படுத்த வேண்டும். அவை  குழந்தைகளின் ஆர்வத்தைத் தூண்டும்.

- தமிழ் இலக்கணத்தில் சொல்லப்படும் 'இரட்டைகிளவி' (இரண்டு ஒரே வார்த்தைகள் சேர்ந்து வரும் ஆனால் பிரித்தால் பொருள் தராது, உதாரணமாக, குடுகுடு, மடமட, டுமுடுமு), 'மோனை' (பாடலில் வரும் வார்த்தைகளின் முதல் எழுத்து அல்லது வரிகளின் முதல் எழுத்து ஒரே மாதிரியாக வருதல், உதாரணமாக, மண்ணில் மயில் மண்டியிட்டு மயங்கியது) 'எதுகை' (பாடலில் வரும் வார்த்தைகளின் இரண்டாம் எழுத்து அல்லது வரிகளின் இரண்டாம் எழுத்து ஒரே மாதிரியாக வருதல், உதாரணமாக, அணிலே அணிலே ஓடிவா) வகையிலான பாடல் வரிகளை குழந்தைகளை எளிதில் சென்றடையும்.

- விளையாட்டு பொருட்களைக் கொண்டு கதை சொல்லலாம். அவ்வாறு சொல்லும் போது உங்கள் குரலினை ஏற்ற இறக்கத்துடனும் பயன்படுத்துவதோடு, நடித்தும், ஆடியும் கதைகளை சொல்ல வேண்டும். உதாரணமாக, பந்து ஒன்றை காண்பித்து அதை போல குதித்து குதித்து போதல்.

- குழந்தைகளுக்கு அலைபேசி, தொலைகாட்சி போன்றவற்றை காண்பிப்பதை முற்றிலும் தவிர்த்தல் வேண்டும். ஏனெனில் அவை குழந்தைகளின் மன வளர்ச்சி மற்றும் மொழி வளர்ச்சிகளில் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்பதை சமீபத்திய ஆய்வுகள் உறுதிபடுத்துகின்றன.



### iii) 12 மாதங்கள் முதல் 36 மாதங்கள் வரை உடைய குழந்தைகளுக்கான கதைகளைக் கட்டமைக்கும் பொது விதிகள்

- சில வரிகளில் இருக்ககூடிய, இலக்கற்ற கதைகளை நீங்களே உருவாக்கலாம் அல்லது படித்ததை சொல்லலாம்.

- 'இரட்டைகிளவி' , 'மோனை', 'எதுகை' அடிப்படையில் அமைந்த குறுங்கதைகளை உருவாக்கி சொல்ல வேண்டும். முடிந்தவரை உங்கள் குரல்கள் ஏற்ற இரக்கத்துடனும், செய்கையுடனும் இருத்தல் வேண்டும்.



- உங்கள் குரல், கதை சொல்லும் திறன் ஆகியவை குறித்து கவலை கொள்ளாது சொல்வது அவசியம்.

- நீங்கள் கதை சொல்ல ஆரம்பிக்கும் சூழலில் அந்த அறையில் உள்ள பொருட்கள் (கடிகாரம், சீப்பு, கிண்ணம், கண்ணாடி,..) அனைத்தையும் கதாபாத்திரமாக உருவாக்கி சொல்லுதல் குழந்தைகளின் ஆர்வத்தைத் தூண்டும்.

- ஆரம்பத்தில் ஒருநிமிடம் அல்லது இரண்டு நிமிடங்களே கதைகள் சொல்ல வேண்டும். பிறகு ஒரு விளையாட்டு அல்லது ஓய்வு. மீண்டும் கதை சொல்ல துவங்கலாம். குழந்தையின் ஆர்வத்திற்கு ஏற்ப குறைப்பதும், நீடிப்பதும் கதை சொல்லியின் திறன் சார்ந்தது.

- எந்த கதை பிடிக்கும், எந்த கதாபாத்திரம் பிடிக்கும் என்பதை அறிந்து அதன் அடிப்படையில் கதைகளை உருவாக்குதல் அவசியம்.

- ஒவ்வொரு வாக்கியமும் அதிகபட்சம் மூன்று அல்லது நான்கு வார்த்தைகள் மட்டுமே இருக்க வேண்டும்.

- படக்கதைகள் கொண்ட புத்தகங்களை பயன்படுத்துதல் குழந்தைகளின் கவனத்தை குவிக்க வழி செய்யும். புத்தகத்தில் உள்ள படங்களும் பெரிதாகவும், பல வண்ணங்களாலும் இருக்க வேண்டும்.

- விலங்குகள், பறவைகள் மற்றும் விளையாட்டுப் பொருட்களை கதைகளுடன் சேர்த்து சொல்லும் போது அவை எழுப்பும் சப்தங்களை குழந்தைகளை எழுப்பப் சொல்லியும், அவைகளைப் போல நடந்து கொள்ளச் சொல்லியும் குழந்தைகளை கதை சொல்லலில் இணைக்கலாம். இவ்வாறு இணைப்பது குழந்தைகளின் மொழித்திறன், உடல் இயக்கத்திறன், கற்பனைத் திறனை மற்றும் நினைவாற்றல் முதலியவற்றை மேம்படச் செய்யும் செய்கிறது.

## iv) 4 வயது முதல் 6 வயது வரை உடைய குழந்தைகளுக்கான கதைகளைக் கட்டமைக்கும் பொது விதிகள்

- நீங்கள் கதைகள் சொல்வதிலிருந்து கதைகளை உங்கள் குழந்தைகள் சொல்ல ஊக்கப்படுத்த வேண்டும்.



- சிறு சிறு இலக்குகள் நோக்கிய கதைகளை அறிமுகம் செய்யலாம். அவ்வாறு அறிமுகம் செய்யும்போது முதல் கதையின் முடிவை நீங்கள் அடைய வேண்டும். அடுத்த கதையின் கதை முடிவை அவர்கள் அடைகிறார்களா என சோதித்துப் பார்க்க வேண்டும்.

- குழந்தைகளுக்கு கதாபாத்திரங்களை வழங்கி அதனை கதையாக மாற்றி சொல்லும்படி சொல்லலாம். உதாரணத்திற்கு, ‘நான் இப்போ சொல்லுற வார்த்தைகள வச்சு கதை சொல்லணும், சரியா?.. சிங்கம், காடு, முயல்’

- அவர்களால் இவற்றை இணைத்து சொல்ல முடியாமல், வேறு கதையைச் சொன்னாலும் அதை நிறுத்தாமல் ஊக்கப்படுத்த வேண்டும்.

- மிக முக்கியமாகக் கடைபிடிக்க வேண்டிய விதி, உங்கள் குழந்தைகள் எத்தனை முறை கேட்டாலும், தவறிழைத்தாலும் நீங்கள் அவர்களை நட்பு ரீதியில்தான் அணுக வேண்டுமே தவிர, திட்டுவதோ, தண்டனைகள் வழங்குவதோ, உதாசீனப் படுத்துவதோ, மற்ற குழந்தைகளோடு ஒப்பிடுதலோ கூடாது. ஏனெனில் திறன்களை கற்றுக் கொடுக்கும் போது நூறு சதவிகிதம் நட்பு ரீதியிலான அணுகுமுறையே பலனளிக்கும்.

- உண்மை கதைகளைக் கற்பனை கதைகளோடு கலந்து சொல்லலாம். அவ்வாறு சொல்வதையே விரும்புவார்கள். ஏனெனில் அவர்களால் எளிதில் தொடர்புபடுத்திக் கொள்ள முடியும்.

- யாரிடம் கதை சொல்கிறீர்களோ, அவர்கள் நீங்கள் சொல்லக்கூடிய கதையின் முக்கியமான கதாபாத்திரமாக இருப்பது அவசியம். அதுவே அக்குழந்தைகளின் சிந்தனையைத் தூண்டும்.

- சிறிய கணித கதைகளை (குறிப்பாக கூட்டல் மற்றும் கழித்தல்) உருவாக்கி சொல்லலாம். அவை உரையாடல் வடிவிலும், கேள்வி பதில் வடிவிலும் இருப்பின் அவை இன்னும் குழந்தைகளை கதைகளுக்குள் பயணிக்கச் செய்யும்.

**உதாரணக் கதை,**



ஒரு பெரிய காட்டில் மூன்று முயல்கள் வசித்தன.

எத்தனை முயல்கள் வசித்தன? ......

ஒருநாள் அங்கே இரண்டு காக்கைகள் வந்து சேர்ந்தன.

என்ன வந்தது சேர்ந்தது?.....

அதைப் பார்த்த முயல்கள் மகிழ்ச்சி அடைந்து, காக்கைகளே காக்கைகளே உங்கள் பெயரென்ன என கேட்டன.

அதற்கு என்ன பெயர் சொன்னது காக்கைகள்? உங்களுக்கு தெரியுமே அந்தப் பெயர்?

எங்க சொல்லுங்க பார்க்கலாம்....

பெரும்பான்மையான குழந்தைகள் தங்கள் பெயரையோ அல்லது உடன் பிறந்தவர்கள் பெயரையோ அல்லது நண்பர்களின் பெயர்களையோ சொல்லுவது வழக்கம். அப்படி சொல்லாவிட்டால் அவர்களின் பெயர்களை நீங்களே கூறி ஊக்கப்படுத்த வேண்டும்.

- கதைகள் ஐந்து நிமிடங்களுக்கும் குறைவாக இருக்க வேண்டும். குழந்தைகள் விரும்பினால் கதையை நீட்டிக்கலாம்.

- இரண்டு கதைகள் சொல்கிறீர்கள் எனில் இரு கதைகளுக்கு இடையில் ஒரு சிறு விளையாட்டு விளையாடுவது குழந்தைகளை உற்சாகப்படுத்தும்.



- குழந்தைகள் கதைகள் சொல்ல துவங்கி விட்டார்கள் எனில் பொருட்களை கொண்டோ அல்லது படங்கள் வரைந்து கதைகளை சொல்வதற்கு அவர்களைத் தயார்படுத்தலாம்.

- குழுவாக அமரவைத்தும் இவ்வயது குழந்தைகளுக்கு கதைகளை சொல்லவும், கதைகளை சொல்ல வைக்கவும் முடியும். உங்களுக்கு வேண்டியதெல்லாம் பொறுமை மட்டுமே. அவர்கள் எண்ணற்ற கதைகளை உங்கள் கவனத்தை தங்கள் பக்கம் திருப்பும் பொறுட்டு சொல்லிக்கொண்டே இருக்க வாய்ப்புள்ளது.

- வண்ண காகிதங்கள், களிமண் பொம்மைகள், வரைபடங்கள் முதலியவற்றை கதைக் கருவிகளாக பயன்பதுவது சுவாரசியம் கூட்டும்.

## v) 7 வயது முதல் 10 வயது வரை குழந்தைகளுக்கான கதைகளைக் கட்டமைக்கும் பொது விதிகள்



- இலக்குகள் உள்ள கதைகளில் விதிமுறைகளைச் சேர்த்து கூறத் துவங்கலாம். அதாவது உங்கள் கதையில் ஒரு நாட்டைப் பற்றி சொல்கிறீர்கள் எனில் அங்கு இருக்கக்கூடிய விதிமுறைகள் ஒன்றிரண்டை சேர்த்துக் கூறுவதோடு அதை மீறுவதால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதையும் கூறலாம். இதன் மூலம் குழந்தைகளின் சமூகத் தொடர்பு, சமூக விதிகள், காரண காரியத் தொடர்புகளை (cause and effect relationship) அறியச் செய்ய முடியும்.

- கதையில் வரும் கதாபாத்திரங்களின் அறிவுக்கூர்மை, ஈகை குணம், உணர்வின் வெளிப்பாடு, முன்யோசனை, திட்டமிடல், நட்புறவு போன்றவற்றை  கதை நிகழ்வுகளின் காட்சிகளாக விவரித்துக் கூறலாம். இதன் மூலமாக கதை கேட்கும் குழந்தைகள் தங்கள் குணாதியங்களை தனக்குள் அறிந்து அறிந்து (introspection) புரிந்து கொள்ளவும், தேவையான இடங்களில் மாற்றம் செய்து கொள்ளவும்  வழிவகை செய்யும்.



- அளவீடுகள், சமூக விதிகள், எளிமையான பிரச்சனைகளுக்கு தீர்வு காணுதல் போன்ற வகை கதைகளான தெனாலிராமன் கதைகள், பஞ்சதந்திர கதைகள், முல்லாவின் கதைகள் பெரிதும் உதவும்.  பல எழுத்தாளர்களின் கதைகளை கேட்பது மற்றும் படிப்பதன் மூலமாக இது போன்ற கதைகளை உருவாக்கவும் முடியும்.



- ஒரே கதையை பல்வேறு பரிமாணங்களில் சொல்லலாம். அவ்வாறு சொல்லும் கதைகளில் பல்வேறு கதாபாத்திரங்கள் ஒரே விசயத்தை எப்படி புரிந்துகொள்கிறார்கள் என்கிற வகையிலான கதைகளை சொல்வதன் மூலமாக குழந்தைகளின் தர்க்க சிந்தனையையும், பகுத்தறியும் திறனையும் வளர்க்க முடியும்.

- பன்முக முடிவுகள் கொண்ட தன்முனைப்பு புரிதல் கதைகள் (perspective stories) கதைகளை உருவாக்கி சொல்வது மிகுந்த பயனளிக்கும். இதில் கதாபாத்திரங்களின் விவரணைகள் அவர்களின் குணாதிசங்களை தெளிவுபடுத்தி நகரும். கதையின் முடிவை நோக்கி நகர்வதைப் போன்று நகரும், ஆனால் எவ்வித உறுதியான முடிவுமற்று, கதையைக் கேட்பவரே கதையின் முடிவினை தீர்மானிக்க வேண்டும். இவற்றில் சரி தவறென்று ஏதுமிராது. இம்மாதிரியான கதைகளை கேட்டும், சொல்லியும் வளரும் குழந்தைகளுக்கு மற்றவர்களின் நிலையிலிருந்து புரிந்துகொள்ளும் (Empathetical understanding) தன்மையானது இயல்பாகவே மேம்பட வாய்ப்பிருக்கிறது.

- இவ்வயது குழந்தைகளுக்கு கதைகளின் வழியே பல்வேறு விதமான ஒழுக்க நெறிகளையும், சமூக பழக்க வழக்கங்களையும், சமூக நெறிகளையும்  கற்றுக் கொடுக்க முடியும்.

- பகுத்தறிவு சிந்தனைகளை அறிமுகம் செய்யவும், ஆய்வு நோக்கிலான பார்வையை குழந்தைகளிடம் கொண்டு வரவும் இக்கதைகள் துணை புரிகின்றன.



## vi) 10 வயது முதல் 15 வயது வரை குழந்தைகளுக்கான கதைகளைக் கட்டமைக்கும் பொது விதிகள்

- பகுத்தறிவு சிந்தனை, அறிவியல் பார்வையை விசாலமாக்கும் சுயசரிதைகள், அறிவியல் கண்டுபிடிப்புகள், அதை அடைய மேற்கொண்ட வழிமுறைகளையும் பயன்களையும் கதைகளாக தொகுத்துக் கூறும் போது குழந்தைகளிடத்தில் மாபெரும் மாற்றங்களை ஏற்படுத்துவதோடு எதிர் காலத்தை வடிவமைத்துக் கொள்ளவும் துணை புரியும்.

- கண்களுக்குப் புலப்படாத தன்மைகளை உடைய எண்ணற்ற கருத்துக்களை கதைகளின் வழியே புகுத்தி சொல்லுதல் அவசியமாகிறது. உதாரணமாக பாவம், ஜனநாயகம், நீதி போன்றவைகள் அடங்கிய குறியீட்டு கதைகளை (sympolic stories) உருவாக்கி சொல்லிட வேண்டும்.


- இவ்வயது குழந்தைகளுக்கு கதைகளின் தலைப்பு மற்றும் கதைகளை உருவாக்கும் விதிமுறைகளைக் கொடுத்து அவர்களாகவே கதைகளை உருவாக்கி பிறருக்கு சொல்வதற்கும், பிற குழந்தைகள் கதைகளை உருவாக்க உதவி செய்யவும் பயிற்சியளிப்பதும் நல்லதொரு மாற்றத்தை கொடுக்கும்.

- மர்மக் கதைகள், அறிவியல் சார்ந்த கற்பனைக் கதைகளை சொல்லும் போது குழந்தைகள் உற்சாகமாகி அக்கதையில் வரும் கதாபாத்திரங்களை கேள்விகளின் வழியே ஆய்வுக்கு உள்ளாக்குகிறார்கள்.

- இலக்கு நோக்கி பயணிக்கும் கதையில், ஆரம்பமும் இறுதியும் அதிக முக்கியத்துவம் பெறும். அதே போல கற்பனையான பிரமாண்ட கதை சொல்லல் ஆகினும் அதில் அதீத தர்க்க மீறல்களைத் தவிர்க்க வேண்டும். உதாரணத்திற்கு “நான் ஈ” என்ற திரைப்படம் கற்பனையான பிரமாண்ட கதை சொல்லல் என்றாலும், கதாபாத்திர விவரணைகளும், அவற்றிற்கான தர்க்கங்களுமே (logic) அக்கதையை வெற்றிபெற வைத்தது. ஆகவே கதைகளை உருவாக்கும் போது இவைகளை கருத்தில் கொள்ள வேண்டும்.

- கணித, அறிவியல், தேடல்கள் நிறைந்த கதைகளைக் கேட்கவே பதின்வயதினர் விரும்புவார்கள்.

- நீங்கள் சொல்லும் கதையில் வருகின்ற எதிர்மறை கதாபாத்திரத்திற்கு தவறியும் கூட உங்கள் குழந்தைகளின் பெயரையோ, அவர்களின் குணாதிசயங்களையோ சேர்க்கக்கூடாது. அப்படி சேர்ப்பது உங்கள் குழந்தையின் உளவியல் வளர்ச்சியில் எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்த வாய்ப்புகளுண்டு.



- கதை முழுதும் திடீர் திருப்பங்கள் (Twists) நிறைந்திருக்க வேண்டும். அவை அவர்களின் சிந்தனையை தூண்டவும் அதே வேளையில் அவர்களால் ஓரளவிற்கேனும் யூகிக்க முடிவதாகவும் அமைய வேண்டும். திடீர் திருப்பங்கள் அவர்களின் ஆர்வத்தை தூண்டி மனதை ஒருநிலைப்படுத்திக் கேட்கவும், ஓரளவிற்கு யூகிக்கும் வகையிலான கதைகளை கேட்பவர் யூகித்து விடை காண்பது அவரது சுய மதிப்பீட்டை மேம்படுத்தவும், தன்னம்பிக்கையை வளர்க்கவும் துணை புரியும்.

- தயங்கும் குழந்தைகளிடம் “நீங்கள் சொல்லும் கதையில் சரி, தவறு என்று ஏதுமில்லை” என எல்லா வயது குழந்தைகளுக்கும் கூறுவது அவசியமாகும். அவ்வாறு கூறுவதன் மூலம் அவர்களை கதை சொல்லலில் முழுமையாக பங்கு கொள்ளச் செய்ய முடியும்

## முடிவுரை

கதை சொல்லல் என்பது ஆகச்சிறந்த அறிவியல் தோய்ந்த கலை. அதை சொல்வதற்கு மனமே பிரதானம் மற்றவைகள் எல்லாம் துணை நிற்பவையே. கதை சொல்வதற்கும் அல்லது கதை கேட்பதற்கும் வயது, இனம், மொழி, கல்வி, பொருளாதாரம், பதவி என எதுவுமே தேவையில்லை. ஏனெனில் இவ்வுலகம் கதைகளால் நிரம்பியது. கதை என்பது கேட்பவரை மட்டுமல்ல, சொல்பவரையும் உருமாற்றும்.



# கதை எனும் விதை

## நூல் ஆசிரியர்கள்

**சி.க. தனபாண்டியன்,** மதுரை மாவட்டம் சொக்கலிங்கபுரம் எனும் கிராமத்தில் சின்னக்கருப்பன், தவமணி தம்பதியருக்கு மகனாக பிறந்தார். உளவியல் பிரிவில் முனைவர் பட்டத்திற்கான ஆய்வினை செய்து வரும் இவர் ஒன்றுக்கு மேற்பட்ட ஊனமுற்றோரின் மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனத்தில் (NIEPMD), மருத்துவ உளவியல் துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறார். தமிழர் வாழ்வியல் மற்றும் தமிழ் இலக்கியங்களில் விரவிக்கிடக்கும் உளவியல் கூறுகளை அறிவியல் பார்வையில் அணுகி மீளுறு செய்வதை நோக்கமாக கொண்டு செயல்பட்டு வருகிறார்.

**சு.கார்த்திகேயன்,** செங்கல்பட்டு மாவட்டம் கேளம்பாக்கம் எனும் ஊரில் சுந்தரவடிவேல், சாவித்திரி தம்பதியருக்கு மகனாக பிறந்தார். NIEPMD எனும் தேசிய நிறுவனத்தில் மருத்துவ உளவியல் துறையின் தலைவர் பொறுப்பில் பணியாற்றி வருகிறார். உளவியலில் முனைவர் பட்டத்திற்கான ஆய்வினை மேற்கொண்டு வருகிறார். மனநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், மனநலத்திற்கான உளவியல் சிகிச்சைகளை அறிவியல் முறைகளின் துணையோடு விளிம்பு நிலை மக்களுக்கும் தமிழில் கொண்டு சேர்ப்பதைத் தலையாய நோக்கமாகக் கொண்டு இயங்கி வருகிறார்.